No. of Printed Pages : 3

**BESE-046**

06273

# இளநிலை கல்வியியல் பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## December, 2014

## BESE-046 : தமிழ் கற்பித்தல்

## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

---

**குறிப்பு :**

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.

---

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15**

தமிழ் கற்பித்தலில் "விளையாட்டு முறை" கற்பித்தலின் கோட்பாடுகள் யாவை? இம்முறையில் ஆசிரியரின் பங்கு யாது ? இம்முறையின் நிறைகுறைகளை விளக்குக.

**அல்லது**

இலக்கணம் கற்பிப்பது அவசியமா? விதிவருமுறையில் இலக்கணம் கற்பித்தலை உதாரணத்துடன் விளக்குக. அதன் நிறை குறைகளைக் கூறுக.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. **15**

நல்ல கையெழுத்துக்களின் நல்லியல்புகள் யாவை ? தொடக்கக் கல்வியாசிரியராகிய நீவிர் நல்ல கையெழுத்து திறன்களை மாணவர்களிடயே வளர்க்க நீவிர் வழங்கிய பயிற்சிகள் யாவை ?

**அல்லது**

ஆசிரியர்கள் தங்கள் செயல்களில் வெற்றி காண வழி அமைத்துத் தருவது பாடக்குறிப்பே! இக்கூற்றின்படி பாடக்குறிப்பு என்றால் என்ன? அதன் இன்றியமையாமையையும், பயன்களையும் விளக்குக.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் எவையேனும் 4 வினாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. **4x5=20**

(a) செய்யுளுக்கும், உரைநடைக்குமுள்ள வேறுபாடு யாது ?

(b) செயல்வழிக் கற்றல் முறை என்றால் என்ன ? அதன் பயன்கள் யாவை ?

(c) மதிப்பீடு என்றால் என்ன ? அதன் சிறப்பியல்புகளைக் கூறுக.

(d) கற்பித்தலில் பயன்படுத்தப்படும் துணைக் கருவிகள் யாவை?அவற்றின் உபயோகத்தையும், பயன்களையும் விளக்குக.

(e) சங்க காலத்தில் தாய்மொழிகற்றல் எவ் வகைகளில் கற்பிக்கப்பட்டது ?

(f) நிரல்வழி கற்பித்தல் என்றால் (Programmed learning) என்ன ? இம்முறையின் அடிப்படை தன்மைகள் யாவை ?

(g) மாணவர்களுடைய பேச்சிலும், வாசிப் பிலும் பெரும்பான்மையாகக் காணப் படும் குறைபாடுகள் யாவை ? அவற்றை திருத்த நீவிர் கையாண்ட ஏதேனும் இரு முறைகளைக் கூறுக.

(h) டால்டன் திட்டம் (Dalton Plan) என்றால் என்ன? இம்முறையின் நிறைகுறை-களைக் கூறுக.

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. **20**

மொழித்திறன்கள் நான்கையும் பெற நூலகப் படிப்பு இன்றியமையாதது. நூலகத்தின் அவசியத்தையும், மொழியாசிரியர்களின் கடமைகளையும் பட்டியலிட்டு உம் கற்பித் தலின்போது இதனைக் கடைபிடித்த விதத்தை விளக்குக.